# ஆதிரை பிச்சையிட்ட தன்மை

*அ. மைதின் அஜிஷா*
இளங்கலை மூன்றாமாண்டுத் தமிழ், தமிழ்த்துறை
புனிதஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெய்க்காலிப்பட்டி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.14958713

## முன்னுரை

மனித வாழ்வினில் உணவு என்பது இன்றியமையாத ஒன்று. பசியோடு இருப்பவர்களுக்கு தேடிச்சென்று உணவு கொடுக்க வேண்டும். மணிமேகலை அட்சய பாத்திரத்தின் உதவியினால் பலருக்கும் பசி ஆற்றினாள். அந்த அட்சய பாத்திரத்தில் ஆதிரை பிச்சை இட்ட தன்மையை குறித்து இக்கட்டுரைவிளக்குவதாகஅமைகின்றது

## காயசண்டிகை ஆதிரையை பற்றிக் கூறுதல்

அறவண அடிகள் ஆதிரை என்னும் கற்புக்கரசியை கூறி அவளிடம் அட்சய பாத்திரத்தில் உணவு வாங்கிக் கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டு ஆதிரையின் வரலாற்றை கூறினாள்.

**''ஈங்குஇவள் செய்திகேள் என விஞ்சையர்**
**புங்கொடி மாதர்க்குப்புகுந்ததை உரைப்போ''** **(மணி. பா.வ. 1-2)**

என்ற வரியின் மூலம் முதலில் யாரிடம் பிச்சை வாய்கங்க வேண்டும்என்ற வரன்முறை அக்காலத்தில் இருந்தன என்பதை அறியலாம்.

## புகார்நகரம்

சோழர்களின் காலத்தில் புகார் நகரம் வர்த்தகத்திற்கு பெயர் பெற்று விளங்கியது. அங்கு கிடைத்த விலை மதிப்பு மிக்க பொருள்களுக்காக பல்வேறு நாடுகளில் இருந்து வணிகர்கள் புகார் நகரத்திற்கு வந்தனர்.

இப்பொழுதும் வங்க கடலில் இருந்து பல பொருள்களை ஏற்றியபடி கப்பல்கள் புகார் நகரத்திற்குள் வந்ததுமாய் இங்கிருந்து அறிய பொருள்களை ஏற்றி கப்பல்கள் வங்க கடலுக்கு பயணித்ததுமாய் புகார் நகரத்தின் கடற்கரை இருந்திருக்கிறது. இந்த வர்த்தகத்தையும் வணிகத்தையும், செய்வதற்கு பல்வேறு வணிகர்கள் புகார் நகரில் இருந்திருக்கிறார்கள்.

## சாதுவனின்அறிமுகம்

புகார் நகரத்தில் வர்த்தகம் செய்யும் ஒரு வணிகன் தான் சாதுவன். சாது வனுக்கு இளம் வயதிலேயே கல்வி கற்று கொடுக்கப்பட்டிருந்தது. தனது தொழிலிலும் சாதுவன் சிறந்து விளங்கினான். சாதுவனுக்கு திருமண வயது வந்ததும் இன்னொரு செல்வர் வீட்டில் பிறந்த ஆதிரை என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டான்.

### சாதுவனின் தீயபழக்கம்

சாதுவன் ஆதிரையின் திருமண வாழ்க்கை நன்றாக சென்று கொண்டிருக்கும்போது சாதுவனுக்கு ஒரு கெட்ட பழக்கம் வந்து சேர்ந்தது. அந்தக் காலத்தில் சுதாடுவதற்கு என்று தனியாக மன்றங்கள் உண்டு. சுதாட்டத்திற்கு சாதுவன் அடிமையானான். சுதாட்டத்துடன் குடிப்பழக்கமும் சசாதுவனுக்கு வந்தது. பிறகு ஒவ்வொரு கெட்ட பழக்கத்திற்கும் அடிமையானான்.

கணிகை விடுதியின் பராமரிப்பு செலவு அதிகமாக இருக்கும். அதனால் எந்த ஆண்மகன் தொடர்ந்து கணிகை விடுதிக்கு செல்கிறானோ அவனின் செல்வத்தை விரைவில் இழந்து விடுவான். அதை போல் சாதுவனும் தன் செல்வத்தை இழந்தான்.

**"வட்டினும் சுதினும் வான் பொருள் வழங்கிக் கெட்ட பொருளின் கிளைகேடு உறுதலின்"**

***(மணி.பா. வ. 7-8)***

இப்பாடல்வரி மூலம் சாதுவனின் சுதாட்ட பழக்கத்தாலும் பல கெட்ட பழக்கங்களாலும் தன் செல்வத்தை இழந்தான் என்பதைஅறிய முடிகிறது.

### ஆதிரையிடம் திரும்புதல்

செல்வத்தை இழந்தபின் தன் மனைவியான ஆதிரையிடமே திரும்பினான். இவனின் தீய பழக்கத்தினால் தனது வீட்டில் செல்வம் எதுவும் இல்லாமல் போனது. ஆதிரையிடம் இருந்த பொன், இரத்தினம் எதுவும் இல்லை.

### சாதுவனின் கல்வி கைகொடுத்தல்

தன்னிடம் எதுவும் இல்லாத போது தான். தான் கற்ற கல்வியும், கற்றுக்கொண்ட தொழிலும், கை கொடுக்கும்என்பர்அறிஞர்.

**"கேடில் விழுச்செல்வம் கல்விஒருவருக்கு**
**மாடல்ல மற்றை யவை"**

***(திருக். பா. எ. 400)***

ஒருவன் தன்னிடம் உள்ள அனைத்தையும் இழந்தாலும் அவன் படித்த படிப்பை மட்டும் யாராலும் எடுத்துக்கொள்ள முடியாது. அந்த கல்வி நிச்சயமாக அவனுக்கு எக்காலத்திலும் கை கொடுக்கும் என்று திருக்குறளின் கூற்றுப்படி சாதுவனும்அனைத்துபொருள்களைஇழந்தாலும் தான்கற்றதொழிலின்மூலம்வாணிகம்செய்து முன்னேறினான்என்றுஅறியமுடிகிறது.

### சாதுவன் வணிகம் செய்யபுறப்படல்

வணிகத்தை மேற்கொள்ள காவிரிப்பூம்பட்டினத்தின் வங்கக்கடலில் வணிகம் செய்வதற்காக சென்ற கப்பலில் ஏறினான். காவிரிப்பும்பட்டினத்தில் இருந்து வங்க கடலுக்கு செல்லும் கப்பல்கள் மூன்று முக்கியமானபாதையில் செல்லும். சாதுவன் சென்ற கப்பல் அந்தோமான் நிக்கோபார் தீவுகளில் இருந்து சாவகம் தீவிற்கு செல்லும் பாதையில் சென்றது.

**"வங்கம் போகும் வணிகர் தம்முடன்**
**தங்கா வேட்கையின்தானும் செலவுழி"**

***(மணி. பா. எ. 11-12)***

இப்பாடல் வரி மூலம் சாதுவன் அந்தோமான் நிக்கோபர் தீவிற்கு வாணிகம் செய்ய சென்றான் என்ற செய்தியை அறியலாம்.

### வங்கக்கடலில் ஏற்பட்ட புயல்

வங்கக் கடலில் ஏற்பட்ட புயலில் சாதுவன் சென்ற கப்பல் சிக்கியது. புயலினால் கப்பல் முழுவதுமாக கவிழ்ந்தது. ஒரு சிலர் சிறிய படகுகள் மூலம் தப்பிக்க முயன்றனர். மற்ற சிலர் கட்டைகளை பிடித்துக் கொண்டு போராடினர். இன்னும் சிலர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

**"நளிஇரு முந்நீர் வளஎிகலன் வெளவ**
**ஒடிமரம் பற்றி ஊர்திரை உதைப்ப"**

***(மணி. பா. வ.13-14)***

இப்பாடல் வரி மூலம் வங்க கடலில் ஏற்பட்ட புயலில் ஒரு சிலர் மட்டுமே தப்பி சென்றனர் என்பதை அறிய முடிகிறது.

### புயலில் தப்பித்தவர்கள் கூறியது

படகில் தப்பித்தவர்கள் காவிரிப்பும்பட்டினத்திற்கு வந்து சேர்ந்தனர். ஆதிரைக்கு இந்த செய்தி தெரிந்ததும் அங்கு சென்றாள். சாதுவனுடன் சென்றவர்கள் அவன் இறந்திருக்கலாம் என்று கூறினர்.

**சக்கரவாள கோட்டத்திற்கு செல்லுதல்**

கணவன் இறந்ததாக நினைத்த ஆதிரை கணவன் சென்ற இடத்திற்கு தானும் செல்ல வேண்டும் என்று ஊரில் உள்ள சக்கரவாள கோட்டத்திற்கு சென்றாள். சக்கரவாள கோட்டம் என்பது சுடுகாடு. அந்த இடத்தில் பத்தினி பெண்களுக்காக ஒரு கோட்டம், அரசர்களுக்கு தனியாக ஒரு கூட்டம் என்று தனி தனியாக இடு காடு, சுடுகாடு என்று இரண்டும் இருந்தது.

**"சுடலைக்கானில்தொடுகுழிப்படுத்து"**

**(மணி. பா. வ. 25)**

இப்பாடல் மூலம் அக்காலத்தில் அரசர்களுக்கு தனி சுடுகாடும், பத்தினிப் பெண்களுக்கு தனி சுடுகாடும் இருந்ததை அறியமுடிகின்றது.

**நெருப்பு தீண்டாமல் இருத்தல்**

சுடுகாட்டில் நெருப்பினை உண்டாக்கி அதனுள் இறங்கினாள். ஆனால் அந்த நெருப்பு அவளை தீண்டவில்லை. காய்ந்த விறகில் பற்றி எரிந்த தீ அவளைச் சுடவில்லை. அவள் உடுத்திருந்த ஆடையிலும் தீப்பற்றவில்லை. அவள் மேனியில் இருந்த சந்தனம், கூந்தலில் சுடி இருந்த ஆகியனவும் மாறாமல் இருந்தன. தீ தாமரைப் போலவும் ஆதிரை தாமரையில் நிற்கும் திருமகள் போலவும் காணப்பட்டாள். தீயும் என்னை ஏற்றுக் கொள்ளாத அளவுக்கு தீவினை செய்தவள் ஆகினேனே என்று சொல்லிக் கொண்டு அழுதாள்.

**"தீயும் தீண்டாத் தீவினை யுடையேன் யாது செய்வேன் "**

**(மணி. பா. வ. 35)**

இப்பாடல் வரி மூலம் ஆதிரை தீயில் விழுந்தும் தீயானது தீண்டாததால் அவளது கற்பு தன்மையை அறிய முடிகிறது.

**அசரீரி நற்சொல் கூறுதல்**

தன்னை நெருப்பு கூட நெருங்கவில்லை என்று ஆதிரை அழுது கொண்டிருக்கும் போது அசரீரி குரல் கேட்டது. வங்கம் சென்ற உன் கணவன் உயிரோடு இருக்கிறான். திரும்பி வருவான் என்று கூறியது. ஆதிரை அசரீரி கூறியதை முழுவதுமாக நம்பி அவனுக்காக காத்திருந்தாள்.

**நாகர்களுடைய தீவில் கரைஒதுங்குதல்**

சாதுவன் மரக்கிளையில் மூன்று நாளாக நீந்தி நாகர் தீவில் கரை ஒதுங்கினான். நாகர்கள் ஒருவகையான பழங்குடியினர். இவர்கள் மனித மாமிசத்தை உண்பவர்கள். இத்தீவில் கரை ஒதுங்கிய எவரும் உயிரோடு திரும்ப மாட்டார்கள். சாதுவனை உண்பதற்காக சென்றுவிட்டனர். அவர்கள் பேசும் மொழி தமிழ் அல்ல.

**''நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்**
**பக்கம் சார்ந்தது அவர் பான்மையன் ஆயினன்"**

**(மணி. பா. வ. 39-40)**

இதன் மூலம் நாகர்கள் என்ற ஒரு வகை மக்கள் இருந்தனர் என்பதும் அவர்கள் தீவிற்கு வரும் மனிதர்களை சுறையாடினர் என்பதும் அறிய முடிகிறது.

**நாகர்களுடன் ஏற்பட்ட நட்பு**

சாதுவனுக்கு வணிகம் பற்றிய அறிவு இருப்பதால் அவர்கள் பேசும் மொழி அவனுக்கு தெரிந்தது. அவர்களின் மொழியிலே நான் சோழ நாட்டில் இருந்து வருகிறேன் என்று அனைத்தையும் கூறினான். இதுவரை வந்தவர்களின் இவர்களின் மொழியில் எவரும் பேசவில்லை. சாதுவனுக்கும் நாகர் மக்களுக்கும் இடையில் நட்பு உருவாகியது. சாதுவன் அவர்களுக்கு ஊண் உணவு உண்பது தவறு என புரிய வைத்தான்.

**பழங்குடியினர் சாதுவனுக்கு பரிசு அளித்தல்**

வங்கக் கடலில் வணிகம் செய்வதற்காக வந்த கப்பலில் சாதுவன் நாடு திரும்ப நினைத்தான். நாகர் மக்கள் அக்கப்பலில் பொன், தங்கம் என்று பல பொருள்களை வைத்து அவனை அனுப்பி வைத்தனர். சாதுவன் நாடு திரும்பினான்.

**சாதுவனும், ஆதிரையும் உதவுதல்**

சாதுவன் நாடு திரும்பியதை அறிந்த ஆதிரை அவனை சந்தித்தாள். விலைமதிப்பு மிக்க பொருள்களுடன் தன் கணவன் திரும்பி வந்ததை நினைத்து ஆச்சரியமடைந்தாள். சாதுவனும் ஆதிரையும் அனைத்து செல்வத்தையும் வைத்துக் கொள்ளாமல் அனைத்து மக்களுக்கும் உதவ ஆரம்பித்தனர்.

### முடிவுரை

சுதாடுவதற்கு என்று தனியாக மன்றம் இருந்ததையும், பிணங்களை எரிப்பதற்கு என்று சுடுகாடு என்ற சக்கரவாள கோட்டம் இருந்ததையும் அறியமுடிகின்றது

சாதுவன் அனைத்து செல்வதையும் இழந்து தனக்கு கிடைத்த செல்வத்தினை தானே வைத்துக் கொள்ளாமல் அதனை அனைவருக்கும் கொடுத்ததனால் அவர்களது கொடைத்தன்மையை அறிய முடிகிறது.

### மேற்பார்வை நூல்கள்

1. மணிமேகலை மூலமும் உரையும். உரையாசிரியர். ந. மு. வேங்கடசாமிநாட்டார், ஔவைதுரைசாமிபிள்ளை
2. அ. மைதீன் அஜிஷா, மூன்றாமாண்டு தமிழ்த்துறை, புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெய்க்காலிப்பட்டி.